பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**05 07 2026** **7 15**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஜனநாயக நடைமுறைகள் மீது இந்தியாவும், அமெரிக்காவும் வலுவான நம்பிக்கை கொண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தொழில்நுட்பத் துறையில் தற்சார்பு நிலையை எட்டுவதற்கான நடவடிக்கைகள் புதிய உச்சத்தை எட்ட உதவிடும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

3. வெங்காயத்தின் கொள்முதல் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. நாட்டில் தென்மேற்குப் பருவமழை மேலும் தீவிரமடைவதற்கானா சாதகமான சூழல் நிலவுவதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. இஸ்தான்புல்லில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் **Sayali Wani** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்திய, அமெரிக்க நாடுகள் ஜனநாயக நடைமுறைகள் மீது உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதவில், மக்களுக்கு எண்ணற்ற வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதில் சட்டத்தின் அடிப்படையிலான ஜனநாயக ஆட்சிமுறை முக்கிய பங்கு வகிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் 250வது சுதந்திர தினத்தை முன்னிட்டு அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் மற்றும் மக்களுக்கு பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையேயான நட்புறவை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்வதன் மூலம் நீண்ட கால அமைதி, வளம் மற்றும் வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாக அமையும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

தொழில்நுட்பத் துறையில் தற்சார்பு நிலையை எட்டுவதற்கான நடவடிக்கைகள் புதிய உச்சத்தை எட்ட உதவிடும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், குஜராத் மாநிலம் சனந்த் நகரில் தொடங்கப்பட்டுள்ள செமிகண்டக்டர் உற்பத்தி ஆலை மற்றும் ஆய்வகம் இந்தியாவின் தொழில்நுட்பத் துறையின் வலிமையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், இளைஞர்களுக்கு பெருமளவிலான வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும் உதவிடும் என்று திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கத்தார், பஹ்ரைன், குவைத், ஓமன் ஆகிய நாடுகளில் இம்மாதம் 10ஆம் தேதி அரசுமுறைப் பயணம் மேற்கொள்கிறார்.

அவரது இந்தப் பயணத்தின்போது அந்தந்த நாடுகளின் தலைவர்கள் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர்களுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்துகிறார்.

மேலும் அந்நாடுகளுடனான நலன் சார்ந்த அம்சங்கள், பிராந்திய மேம்பாடு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதிக்க உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து இம்மாதம் 13-ம் தேதி நியூயார்க் செல்லும் அவர், 2028-29-ம் ஆண்டில் ஐ.நா. பாதுகாப்பு சபையின் தற்காலிக உறுப்பினருக்கான நடவடிக்கைகளை தொடங்கி வைக்கிறார்.

பின்னர் பெல்ஜியம் தலைநகர் பிரசல்சில் நடைபெறும் இந்திய-ஐரோப்பிய யூனியன் வர்த்தகம் மற்றும் தொழில்நுட்ப கவுன்சில் கூட்டத்தில் திரு. ஜெய்சங்கர் பங்கேற்கிறார்.

<<<<>>>>

வெங்காயத்தின் கொள்முதல் விலை 13 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வெங்காயத்தின் விலை குவிண்டால் ஒன்றுக்கு ஆயிரத்து 875 ரூபாயில் இருந்து 2 ஆயிரத்து 125ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் இத்தகைய கொள்முதல் நடவடிக்கைகள் காரணமாக வெங்காயம் பயிரிடும் விவசாயிகளுக்கு வருவாய் அதிகரிக்கும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம், குஜராத் மாநிலங்களில் வெங்காயம் போதிய அளவு கையிருப்பில் உள்ளதாகவும் அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

<<<<>>>>

மிசோரம் மாநில வாக்காளர் பட்டியலில் எந்தவொரு வெளிநாட்டினர் பெயரும் இடம்பெறவில்லை என்று அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி **Garima Gupta** உறுதிபட தெரிவித்துள்ளார்.

அம்மாநிலத்தில் மே மாதம் **30**-ம் தேதி முதல் ஜூன் **28**-ம் தேதி வரை நடைபெற்ற வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நிறைவடைந்து வரைவு வாக்காளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், வாக்காளர் பட்டியலில் வெளிநாட்டினர் பெயர்கள் இடம்பெற்றுள்ளதா என்பது குறித்து அதிகாரிகள் முழுமையான சரிபார்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதாக கூறினார்.

ஒவ்வொரு வாக்காளர்களின் வீடுகளுக்கும் நேரடியாக சென்று வாக்காளர்களின் விவரங்கள் சரிபார்க்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

மூன்றாவது கட்டமாக 16 மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை மிசோரம் 100 சதவீத பணிகளை நிறைவு செய்துள்ள முதல் மாநிலமாக திகழ்கிறது என்று அவர் மேலும் கூறினார்.

<<<>>>>

வர்த்தக வங்கிகளைக் காட்டிலும் கூட்டுறவு வங்கிகள் சிறப்பாக செயல்பட்டு வருவதாக மகாராஷ்டிர மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், அம்மாநிலத்தில் 2 லட்சத்துக்கும் அதிகமான கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருவதாகவும், நாட்டிலேயே பெருமளவிலான கூட்டுறவு சங்கங்கள் நிறைந்த மாநிலமாக மகாராஷ்டிரா திகழ்வதாகவும் திரு. ஃபட்னவிஸ் தெரிவித்துள்ளார்.

<<<>>>>

நாகாலாந்து மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு வேளாண்துறை முக்கிய பங்கு வகிப்பதாக அம்மாநில முதலமைச்சர் திரு. நெஃப்யூ ரியோ தெரிவித்துள்ளார்.

முதலமைச்சரின் மேம்பாட்டு நிதியில் இருந்து 35 டிராக்டர் மற்றும் 6 பயன்பாட்டு வாகனங்களை அம்மாநில விவசாயிகளுக்கு வழங்கிப் பேசினார்.

அம்மாநிலத்தின் மண்வளத்தை விவசாயிகள் பயன்படுத்திக்கொண்டு வேளாண் விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க முன்வர வேண்டும் என்று முதலமைச்சர் திரு. நெஃப்யூ ரியோ கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

ஆஸ்திரேலியாவின் மிக முக்கிய பொருளாதார நட்பு நாடாக இந்தியா திகழ்கிறது என்று அந்நாட்டுப் பிரதமர் திரு. ஆண்டனி ஆல்பனீஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், உலகின் 4வது மிகப்பெரிய பொருளாதார நாடாகவும், விரைவான பொருளாதார வளர்ச்சி கொண்ட நாடாகவும் இந்தியா உருவெடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே பாதுகாப்பு, பொருளாதார மற்றும் கலாச்சாரத் துறைகளில் வலுவான ஒத்துழைப்பு இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

வர்த்தகம், தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் அமைதி, ஸ்திரத்தன்மை, வளம் ஆகியவற்றை உறுதி செய்வதில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுமு என்று திரு. ஆண்டனி ஆல்பனீஸ் கூறியுள்ளார்.

<<<<>>>>

நாட்டின் பல்வேறு பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை மேலும் தீவிரமடைவதற்கானா சாதகமான சூழல் நிலவுவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குஜராத், ஹரியானா, பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் ஒருசில பகுதிகளில் அடுத்த 4 தினங்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

மத்தியப்பிரதேசம், கர்நாடகா, ராஜஸ்தான், தெலங்கானா மாநிலங்களின் ஓரிரு இடங்களில் இன்று கன முதல் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

அசாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா, சத்தீஸ்கட், உத்தராகண்ட், ஹிமாச்சலப்பிரதேசம் மற்றும் தென்

மாநிலங்களின் ஒருசில இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே கேரளத்தில் உள்ள 14 மாவட்டங்களிலும் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் கூறியுள்ளது.

கண்ணூர், காசர்கோடு மாவட்டங்களில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை நீடிக்க வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து கேரளம், லட்சத்தீவு கடற்பகுதிகளில் அலைகளின் சீற்றம் அதிகரிக்கக்கூடும் என்பதால் அப்பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மகாராஷ்டிரா மாநிலம் மும்பை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக அம்மாநில மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக மும்பை, தானே, பால்கர் ஆகிய பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக பல்வேறு பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளதால் சாலை மற்றும் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இஸ்தான்புல்லில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் **Sayali Wani** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Swastika - Taneesha Kotecha** இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் **Ankur Bhattacharjee - Swastika Ghosh** இணையும் இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளன.

-------------

உலக பாரா வில்வித்தைப் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், மூன்று வெள்ளிப் பதக்கங்களை வென்றது.

செக் குடியரசில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் **Bhawna** தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஹர்வீந்தர் சிங் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிர் காம்பவுண்ட் பிரிவில், **Sheethal Devi**-யும், மகளிர் ஒற்றையர் பிரிவில் **Pooja Jatyan**-னும் வெள்ளிப் பதக்கம் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை **5** தங்கம், **3** வெள்ளி, **2** வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

**<<<<The End>>>>**